19.4.2023

ஊடக வெளி
Ir. பத்மநாதன் K.
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**SPRWTS: சுங்கை பேராக் மூல நீர் பரிமாற்றத் திட்டம் (SPRWTS) குறித்து பினாங்கு மற்றும் பேராக் மாநிலத்திற்கு நற்செய்தி அறிவிப்பு.**

- **SPRWTS திட்டம் பயன்படுத்தப்படாத மூல நீர் வளத்தை மேம்படுத்துகிறது.**
- **இது மிகவும் செலவு குறைவானத் தீர்வாகும். இது எதிர்கால நீர் கட்டணங்களில் குறைந்த தாக்கத்தையே ஏற்படுத்தும்.**
- **இது ஒரு நீண்ட கால தீர்வாகும். இத்திட்டம் 2050 ஆம் ஆண்டு வரை பினாங்கு மற்றும் பேராக் மாநிலங்களின் மூல நீர் தேவைகளை நிவர்த்திச் செய்யும்.**

பினாங்கு, புதன், 19.04.2023: சுங்கை பேராக் மூல நீர் பரிமாற்றத் திட்டத்தை (SPRWTS) செயல்படுத்துவது பற்றிய பிரதமரின் அறிவிப்பு பினாங்கு மாநிலத்திற்கும் அதன் மக்களுக்கும் ஒரு நற்செய்தியாகும்.

மேலும், SPRWTS திட்டம் செயல்படுத்தப்படுவது பேராக் மக்களுக்கும், குறிப்பாக வடக்கு பேராக் மாநிலத்திற்கு வசிப்பவர்களுக்கும் ஒரு நற்செய்தியாகவும் அமைகிறது.

15.4.2023 அன்று, பினாங்கு மாநில அரசின் சார்பாக மாநில முதலமைச்சர் மேதகு சாவ் கொன் இயோவ் எழுப்பிய 3 பிரச்சனைகள் குறித்து பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் பரிசீலிப்பதாக முத்துச் செய்திகள் நாளிதழ் வெளியிட்டது.

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

மத்திய அரசின் தொழில்நுட்ப அறிக்கை

2022, ஆகஸ்ட் - முன்னாள் சுற்றுச்சூழல் மற்றும் நீர் அமைச்சு (KASA) "வட பேராக் மற்றும் பினாங்கில் நீர் விநியோகம் செய்ய சுங்கை பேராக் மாநிலத்திலிருந்து முன்மொழியப்பட்ட நீர் பரிமாற்றத் திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் முன்-பொறியியல் வடிவமைப்பு ஆய்வு" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையைப் பகிர்ந்துள்ளது. பின்வருபவை அவற்றில் அடங்கும்:

"இந்த இறுதி அறிக்கையானது, LAP (பேராக் நீர் வாரியம்) மற்றும் PBAPP ஆகியவற்றில் இருந்து கிடைக்கும் சமீபத்திய தகவல்களின் அடிப்படையில், வட பேராக் மற்றும் பினாங்கிற்கான திட்டமிடப்பட்ட நீர் மற்றும் அதன் விநியோக தேவைகளைக் காட்டுகிறது. அத்துடன் ஜே.பி.எஸ் (நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் துறை) மூலம் NAWABS (தேசிய நீர் இருப்பு மேலாண்மை அமைப்பு) ஆய்வில் இருந்து பெறப்பட்ட பேராக் மாநில பிற மாவட்டங்களுக்கான எதிர்கால கோரிக்கைகளும் இதில் அடங்கும்.

**சுங்கை பேராக்கில் இருந்து** 1,500 MLD **எடுக்கப்பட உள்ளது. இது அப்பகுதியில் உள்ள மற்ற பங்குதாரர்களின் செயல்பாடுகளுக்கு குறைந்தபட்சம் அல்லது எந்த இடையூறும் ஏற்படுத்தாது என முழுமையான உத்தரவாதத்தை வழங்குகிறது.**

மூல நீர் பரிமாற்றத் தேவைகள்

| **விளக்கம்** | **உண்மையான தேவை (MLD)** | **முன்மொழியப்பட்ட அமைப்புத் திறன் (MLD)** |
|---|---|---|
| வட பேராக் 2050 ஆண்டுக்கான தேவை | 314 | 300 |
| பினாங்கு மாநில தேவை | 714 | 700 |
| BMD கூடுதல் நீர் ஓட்டம் (பேராக்கில் உள்ள புக்கிட் மேரா அணை) | | 500 |
| மொத்த மூல நீர் பரிமாற்றத் திறன் | | 1500 |

சுங்கை பேராக், சுங்கை இஜோக் மற்றும் புக்கிட் மேரா அணை ஆகிய இடங்களில் நீர் தரத்தின் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அங்கீகரித்த

ஆய்வகங்களில் சோதனை செய்யப்பட்ட in-situ மாதிரிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட அனைத்து மாதிரிகளும் நல்ல தரமான மூல நீரைக் காட்டுகின்றன மற்றும் குடிநீருக்கு ஏற்ற IIA வகை மூல நீரின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன".

இந்த தொழில்நுட்ப அறிக்கை 2 முக்கிய கூறுகளை தெளிவாக பதிவு செய்கிறது:

- SPRWTS திட்டம் பினாங்கு மற்றும் பேராக் மாநிலங்களுக்குப் பயனளிக்கும்; மற்றும்
- இந்த மூல நீர் பரிமாற்றத் திட்டம் நீர் விநியோக பொறியியல் நிலைப்பாட்டில் சாத்தியமாகிறது.

சாத்தியக்கூறுகள்

SPRWTS-**க்கான** 3 **முக்கிய கூறுகள்**:

1. இது பினாங்கு மற்றும் பேராக் மாநிலங்களின் நலனுக்காக ஏற்கனவே இருக்கும் மூல நீர் வளத்தை (சுங்கை பேராக்) மேம்படுத்துகிறது. பிராந்திய வளர்ச்சி மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான வளங்களைப் பகிர்வது வட கோரிடோர் பொருளாதாரப் பிராந்தியத்தின் (NCER) ஒட்டுமொத்த இலக்குகளுக்கு ஏற்ப அமைகிறது. 2021 ஆம் ஆண்டின் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்புகளின் அடிப்படையில், பினாங்கு மற்றும் பேராக் ஆகிய இரண்டு NCER மாநிலங்கள் மொத்தம் ரிம175.7 பில்லியன் பங்களித்துள்ளன.

2. இது குறைந்த செலவுக்கானத் தீர்வாகும். SPRWTS திட்ட மேம்பாட்டுக்கானச் செலவுகள் பினாங்கு மற்றும் பேராக் ஆகியவற்றிற்கான தனித்தனி தீர்வுகளை உருவாக்குவதற்கான செலவை விட குறைவாக இருக்கும். குடிநீரை உற்பத்தி செய்ய மூல (நதி) நீரை சுத்திகரிப்பது, நீர் விநியோக நடவடிக்கைகளுக்கு அவசியமாகும். எனவே, பினாங்கு மற்றும் பேராக் மாநிலங்களின் <u>எதிர்கால நீர் கட்டணங்களில் SPRWTS மிகக் குறைந்த தாக்கத்தையே ஏற்படுத்தும்.</u>

3. இது ஒரு நீண்ட கால தீர்வாகும். SPRWTS திட்டம் 2050 வரை பினாங்கு மற்றும் பேராக் மாநிலத்தின் மூல நீர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளது.

பினாங்கிற்கு இரண்டாவது முக்கிய மூல நீர் ஆதாரம் தேவை

PBAPP பினாங்கு மாநிலத்திற்கு இரண்டாவது மூல நீர் ஆதாரத்தைக் கொண்டு வர வேண்டும். ஏனெனில், பினாங்கு அதன் ஒரே முதன்மையான மூல நீர் ஆதாரமாக சுங்கை மூடாவை மட்டுமே "அதிகமாகச் சார்ந்து" உள்ளது. அதன் விளைவுகள் பின்வருவன:

- எதிர்கால நீர் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான மூல நீர் ஆதாரங்கள் இல்லை. பினாங்கின் நீர் பயன்பாடு 23 ஆண்டுகளில் 62% அதிகரித்தது, 1999 இல் 536 MLD இலிருந்து 2022 இல் 868 MLD ஆக அதிகரித்தது. பினாங்கின் நீர் தேவை 2050 வரை இந்த வேகத்தில் அதிகரித்தால், PBAPP சுங்கை மூடாவிலிருந்து போதுமான மூல நீரை எடுக்க முடியாமல் 2030க்கு மேல் பினாங்கின் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தேவையை ஈடு செய்ய இயலாது.

- 2023 ஜனவரியில் தொடங்கிய தற்போதைய வறண்ட காலம் உட்பட, பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நீடித்த வறட்சி காலங்களில் நீர் நெருக்கடி அதிகமாக ஏற்படுகிறது. பினாங்குக்கு தினசரி சுத்திகரிக்கப்பட்ட நீரைத் தயாரிக்க PBAPP பயன்படுத்தும் 80% மூல நீர் சுங்கை மூடாவிலிருந்து எடுக்கப்பட்டதாகும். நீண்ட வறண்ட காலங்களில் சுங்கை மூடாவிலிருந்து நீர் பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம், பினாங்கில் தவிர்க்க முடியாத மாநில ரீதியிலான நீர் நெருக்கடி ஏற்படும்.

- ஜூலை 2022 இல் கெடாவில் சுங்கை மூடா சம்பந்தப்பட்ட விபத்துக்கள் குறிப்பாக ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் விளைவாக பினாங்கில் நீர் விநியோகச் சேவைகளை சீர்குலைத்தது.

எனவே, பினாங்கு மாநிலத்திற்கு SPRWTS திட்டம் சிறந்த நீர் ஆதார தீர்வாக அமையும் என PBAPP கருதுகிறது. இது 2050 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் நீர் அபாயத்தை கணிசமாகக் குறைக்கும்.

இருப்பினும், SPRWTS என்பது பெரிய அளவிலான மாநிலங்களுக்கு இடையிலான மூல நீர் பரிமாற்றத் திட்டமாகும். இது செயல்படுத்த பல ஆண்டுகள் ஆகும். பினாங்கைப் பொறுத்த வரையில், ஒரு பெரிய நீர் நெருக்கடியின் அபாயத்தைக் குறைக்க, இத்திட்டம் 2030க்கு முன்னதாக செயல்படுத்த வேண்டும்.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் : syarifah@pba.com.my